உ

சிவமயம்

# கனடா-காரை கலாச்சார மன்றம்

## தமிழ்மொழித் திறன், பண்ணிசைப் போட்டி - 2019

## வாசிப்பு

### மத்திய பிரிவு (தரம்3,4)

## மன்னன் பண்டாரவன்னியன்

இலங்கையின் வன்னிப் பகுதியை முன்பு ஆண்டவர்கள் வன்னியர்கள் ஆவர்.

இலங்கையின் கரையோரங்களை அந்நியர் ஆண்டு வந்தனர்.

அந்நியரால் வன்னியைக் கைப்பற்ற முடியவில்லை.

இலங்கையை ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் வன்னியின் மன்னனாக பண்டாரவன்னியன் இருந்தான்.

ஆங்கிலேயர் வன்னியிலும் தம் ஆட்சியை நிறுவ முயன்றனர்.

ஆங்கிலேயர் பெரும் படையை பண்டாரவன்னியன் மீது ஏவி விட்டனர்.

பண்டாரவன்னியன் கதிர்காமநாயகம் என்பவனால் காட்டிக்கொடுக்கப்பட்டான்.

ஆங்கிலேயரால் சுடப்பட்டு வீரச்சாவு அடைந்தான்.

அவன் உயிர் இழந்த இடத்தில் மாவீரனுக்கான நடுகல் ஒன்று நடப்பட்டது.